அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI
Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.
Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S
Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

கலிங்கத்துப்பரணி காட்டும் போர்க்களக் காட்சிகள்

சே.அனிதா
(Reg.No.BDU2210632780188) முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 022, தமிழ்நாடு.
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

முனைவர் தி.ஆறுமுகம்
இணைப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர்,
தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 022, தமிழ்நாடு.
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

Abstract

*'Bharani' literature is a genre of poetry that glorifies a specific battlefield, the events that transpired there, and the monumental victories achieved by a hero. It explores external themes such as the nature of the battlefield, the plight of fallen warriors, and the dynamics of combat. Through the themes presented in *Kalingathupparani*—such as the warriors' patriotism and their heroic deaths while fighting fearlessly at the forefront-one gains insight into the valorous spirit of women. This is evident in their expectation that their husbands be brave, their disdain for death resulting from wounds sustained while fleeing, and their pride in extolling their husbands' heroism; thus, women are portrayed as possessing a valor akin to that of men.*

Keywords: *Battlefield, Kalingathupparani, Elephant corps, Ploughing field, Male elephant.*

ஆய்வுச் சுருக்கம்

பரணி இலக்கியம் ஓர் செருகச்செய்த போர்க்களத்தையும் அக்களத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், அவன் அடைந்த பெருவெற்றிகளையும் சிறப்பித்துக் கூறும் பிரபந்தமாகும். புறச்செய்திகளான போர்க்களச் சிறப்பு, போர்க்களத்தில் இறந்த வீரர்களின் நிலை, போர்க்களச் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதாகும். கலிங்கத்துப்பரணி புறச்செய்திகள் மூலம் வீரர்களின் நாட்டுப்பற்றும், உயிரைப் பொருட்படுத்தாமல் முன்னின்று போரிட்டு வீரமரணம் எய்திய வீரச்சிறப்பும், கணவன் வீரனாக இருக்க வேண்டும் என்று பெண்கள் கருதுவதும், விழுப்புண்பட்டால் வெறுப்பு கொண்டு இறத்தலும், கணவனின் வீரத்தன்மையைப் புகழ்ந்து கூறுவதும் ஆகிய செயல்கள் மூலம் பெண்களும் ஆண்களைப் போல வீரப்பண்புடன் திகழ்வதை அறியமுடிகிறது.

கருவிச் சொற்கள் *(Keywords):* போர்க்களம், கலிங்கத்துப்பரணி, யானைப்படை, ஏர்க்களம், களிறு

முன்னுரை

பழமைக்கும் பழமையாய் இலக்கிய வளமுடையதாய் நிற்பதோடு புதுமைக்கும் புதுமையாய் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது நம் தமிழ்மொழியாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த மொழியில் பலவகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவ்விலக்கியங்களில் சிற்றிலக்கியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

அடிப்படை உறுதிப்பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ, சிலவோ குறைந்து வந்து கற்பனை, தெய்வப் போற்றல், தனிமனிதப் போற்றல் முதலியவற்றிற்கு மிகுதியும் இடம்பெறுவன சிற்றிலக்கியங்கள் ஆகும்.

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். இவ்வகையில் மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டிய தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று பரணியாகும். அத்தகைய பரணி இலக்கியம் போர்க்களத்தைப் பாடும் பொருண்மை உடைய இலக்கியம் ஆகும்.

பரணி இலக்கியம் ஓர் அரசன் செருகச் செய்த போர்க்களத்தையும் அக்களத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், அவன் அடைந்த பெரு வெற்றிகளையும் சிறப்பித்துக் கூறும் பிரபந்தமாகும். புறச்செய்திகளான போர்க்களச் சிறப்பு, போர்க்களத்தில் இறந்த வீரர்களின் நிலை, யானைகளின் நிலை, போர்க்களச் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பரணியின் இலக்கணம்

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி

என இலக்கண விளக்கம் பரணிக்கு இலக்கணம் கூறுகிறது.

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளை வென்ற பெருவீரன் ஒருவன் மீது இப்பரணி இலக்கியம் பாடப்பெறும் என்று பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளது. அதனையொட்டி *A Poem about a hero who destroyed thousand elephants in war* என்று ஆங்கிலத்தில் குறிப்பிடலாம். பண்டைத் தமிழ் இலக்கியத்தை அகம், புறம் என்று பிரிப்பர். தமிழர்களின் காதல் வாழ்க்கையைப் பாடுபவை அக இலக்கியங்கள். வீரம், கொடை, மானம் முதலியவற்றைப் பாடுபவை புற இலக்கியங்கள். அவ்வகையில் பரணி புற இலக்கியமாகும்.

கலிங்கத்துப்பரணி

முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான். கலிங்க மன்னன் அனந்தவர்ம சோடங்கன் மீது போர் தொடுத்து வென்ற வீரச்செயல்களைப் பாடுவது இப்பரணியாகும். கலிங்கத்துப் பரணியின் பாடல்கள் பொருள் நயமும், ஓசை நயமும் மிக்கவை. போரில் வெற்றிப் பெற்றவர்களைச் சிறப்பித்து ஏற்றிக் கூறுவது பரணியின் இலக்கணம் ஆனாலும், வென்றவர் பெயரால் நூல் வழங்கப்படுவதில்லை. மாறாக தோற்றவர் பெயரோடு சார்ந்தே நூல் பெயர் பெற்று விளங்குகின்றது. கலிங்க மன்னனை வென்ற செய்தியைக் கூறும் நூல், வென்ற மன்னனாகிய குலோத்துங்கன் பெயராலோ, அவன் தளபதி கருணாகரன் பெயராலோ பெயர் பெறாது, கலிங்கத்துப்பரணி என்றே பெயர் பெற்றுள்ளது.

போர்ச் செய்திகள்

வீரத்தின் அடிப்படையில் மக்களினம் தங்களுக்குள் நிகழ்த்திய போர்கள் சிறப்புமிக்கதாகக் கருதப்படுகின்றன. பழங்கால அரசியலுக்கும் போருக்கும் வீரமே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளன. பழங்காலத்தில் களப்போர், முற்றுகைப் போர் ஆகிய இருநிலைகளில் பேராற்றலை வெளிப்படுத்த புறவீடு அமைதது பெரும் போரினை மேற்கொண்டனர். அவற்றைப் போருக்கு முன், போருக்குப் பின் என்று வகைப்படுத்தினர்.

போருக்கு முன் நிகழ்வுகளாக நிமித்தம் பார்த்தல், நற்சொல் கேட்டல், படைப்பிரிவிற்கு ஏற்றவாறு பல்வேறு வீரர்களைச் சேர்த்தல், போர்க்களம் நோக்கிப் படைவகுப்பு நடத்துதல், நால்வகைப் படைகளைச் சிறப்பித்தல், போர் அறத்தைக் காப்பாற்றுதல் போன்ற பல்வேறு முன் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. போருக்குப் பின் நிகழ்வுகளாக வெற்றி ஆர்ப்பரிப்பு, பகைவரின் பொருள் கவர்தல், தோற்றவர்களை சிறைப்படுத்துதல், வீரர்களுக்கும் கலைஞர்களுக்கும் கொடையளித்துச் சிறப்பு செய்தல், போர் அறக்கோட்பாடுகளையும் விளக்குவதாக அமைகிறது.

யானைப்படை

யானைப்படை யானைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட படையாகும். போர்களில் பயன்படுத்தப்படும் இவ்வகைப் படைகள் பழங்காலத்தில் இருந்தன. படைப்பிரிவில் யானைப்படையும் பண்டைக்காலம் முதல் இடம்பெறுவதைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் உணர்த்துகின்றன. பகைவரை அஞ்சச் செய்யும் ஆள்படையாகிய தானை, யானைப்படை, குதிரைப்படை என்ற மூவகையும் அரசனைப் பகைவர் மொய்த்த காலத்து ஒரு வீரன் நின்று வென்ற முன்னணிப்படை பற்றியும் தொல்காப்பியம் உணர்த்துகிறது. இதனை,

தானை யானை குதிரை என்ற

நோனார் உட்கும் மூவகை நிலையும் (தொல்.72)

என்ற நூற்பாவின் வழி அறியமுடிகிறது.

அனைவரும் போர்க்களத்தில் நிற்கும் போது இவன் தனியொருவனாக முன்னே நின்றான் என்ற செய்தியை,

போர்மலைந்து ஒருசிறை நிற்ப யாவரும்

அரவு உமிழ் மணியின் குறுகார் (புறநானூறு, 294)

என்று புறநானூற்றின் பாடலடிகள் வாயிலாக உணரமுடிகிறது.

முதற்குலோத்துங்கனின் படைவீரர்கள் கலிங்கவீரர்களின் மீது படைகளை விடுத்தனர். சோழர்கள் விடும் படைக்கருவிகள் தம்மேலே தாக்காதபடி கலிங்கவீரர்கள் தம் கேடயங்களை மதில்போல் வரிசையாக அமைத்து அவற்றைத் தடுத்தனர் என்பதை,

விடுத்த வீரர் ஆயுதங்கள்

மேல் விழாமலே நிரைத்து

எடுத்த வேலிபோல்; கலிங்கர்

வட்டணங்கள் இட்டவே! (கலிங்கத்துப்பரணி, 426)

என்று பரணி மூலம் அறியமுடிகிறது.

யானையை எதிர்த்துப் போர்புரிதல்

மேல்வரும் படைக்கலங்களை அழிததுப் பெருமிதம் கொள்ளும் பாதுகாவலும், எதிர்வரும் யானையை எதிர்த்து ஏறும் பெருமையும் பற்றித் தொல்காப்பியம்,

படையறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும்

களிறு எறிந்து எதிர்தோர் பாடுங்களிற்றொடு (தொல்.72)

என்று நூற்பாவின்வழி விளங்குகின்றது. மேலும்,

நீலக் கச்சை பூவார் ஆடைப்

பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்

மேல் வருங் களிற்றொடு வேல்துரந்து இனியே

தன்னுந் துரக்குவன் போலும் ஒன்னலர்

எஃகுடை வலத்தர் மாவொடு புரத்தாக்

கையின் வாங்கித் தழிஇ

மொய்ம்பின் ஊக்கி, மெய்க் கொண்டனனே (புறநானூறு, 274)

என்று புறநானூற்று பாடல் உணர்த்துகிறது. வன் நீலநிறக்கச்சை தன் ஆடைமேல் இறுக்கிக் கட்டியிருந்தான். இடையில் பூப்போட்ட துணி ஆடை. அவனைத் தாக்க யானை ஒன்று வந்தது. அவன் தன் கையிலிருந்த வேலை முன்பே ஒரு பகைவன் மீது வீசிவிட்டான். எனவே வீசவேல்

இல்லாமல் இருந்தான். அப்போது குதிரைமேல் வந்தப கையாளி ஒருவன் அவன்மீது வேலை வீசினான். அது அவன் மேல் பாய்ந்தது. அதனைப் பிடுங்கித் தன் வலிமையெல்லாம் ஒன்று திரட்டித் தன்னைத் தாக்க வந்த களிற்றின் மேல் வீசினான். அது சாயக்கண்டு மகிழ்ந்தான். மகிழ்ச்சியில் தானும் மாண்டான் என்ற செய்தியை உணர்த்துவதை அறியமுடிகிறது.

இருதிறப் படைகளிலும் உள்ள மதம் பொருந்திய யானைகள் ஒன்றோடு ஒன்று எதிர்த்துப் போர் புரிந்தன. அவை மலைகளோ, என்று சொல்லும்படியாக பருத்து இருந்தன. அவ்யானைகள் கொம்புகளோடு கொம்புகளால் தாக்கிப் போர் புரியும் பொழுது அவற்றின் தந்தங்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன என்பதை,

மருப்பொடு மருப்பு எதிர், பொருப்பு இவை
எனப் பொருமதக் கரி மருப்பி னிடையே
நெருப்போடு நெருப்பு எதிர் சுடர்ப்பொறி
தெறித்து எழ, நிழல்கொடி தழல் கதுவவே (கலிங்கத்துப்பரணி, 412)

என்று கலிங்கத்துப்பரணி ஊணர்த்துவதை அறியமுடிகிறது.

போர்க்களமும் ஏர்க்களமும்

புற வாழ்வில் போரின் மூலம் நிலத்தை வெல்வதே ஆணின் இலக்கணமாகக் கருதப்பட்டது. உழவர் களவழி அன்றி, போர்க்களத்தில் தேர்வீரர் தோற்றிய வெற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பகையும் தடுக்கும் வேல் வெற்றியும் கூறப்பட்டுள்ளது. அரிய பகையைத் தடுக்கும் ஆற்றலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

ஏரோர் களவழி அன்றி களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்
பெரும்பகை தாங்கும் வேலினானும்
அரும்பகை தாங்கும் ஆற்றலானும் (தொல்.75)

என்று தொல்காப்பிய நூற்பாவில் சுட்டப்பட்டுள்ளது.

விரைவாக அம்புகளைச் செலுத்தும் வலிய வில்லின் பெரிய நாண் செலுத்திய அம்புகளாகிய மழை பொழிந்து, குருதி தோய்ந்து ஈரமாகிய பெரிய போர்க்களத்தில் உள்ள தேர்கள் ஏர்களைப் போல் உள்ளன. இதனை,

விசைப்புறு வல்வில் வீங்கு நாண் உகைத்த
கணைத்துழி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர்ஏர் ஆக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்ந்த திருத்துறு பைஞ்சால் (புறம்.369)

என்று புறநானூற்றுப்பாடல் உணர்த்துகிறது. இச்செய்தி கருணாகரன் முற்பட்டுத் தன் யானையைப் பகைவர் மேல் செலுத்தியதும், இரண்டு படையினரும் மன எழுச்சி குன்றாமல் கொடிய போரைக் கோபித்துச் செய்தனர். அப்பொழுது முதற்குலோத்துங்கன் அனுப்பிய படைகளும், ஏழு பிரிவுகளைக் கொண்ட கலிங்கநாட்டுப் படைகளும், வெற்றி மாலையைத் தாங்களே முதலில் சூடிக்கொள்ள வேண்டும். அதனால் யாவரும் ஒன்றாகத் திரண்டு முற்பட்டுக் கடும்போர் புரிந்தனர். இதனை,

உபய பலமும் விடாது வெஞ்சமம்

உடலு பொழுதினில் வாகை முன்கொள

அயன் வீடுபடை, ஏழ் கலிங்கமும்

அடைய ஒரு முகம் ஆகி முந்தவே! (க.பரணி, 445)

என்று கலிங்கத்துப்பரணியிலும் குறிப்பிடுகிறது. உபய பலம் — இரண்டு படைகள்; அபயன் — சோழன்.

களிறுகளின் தன்மை

அன்புடை மனைவி புண்பட்டோனைப் பேய் நெருங்க விடாமல் காக்கும் தொடாக் காஞ்சியும், இறந்த கணவன் இறந்த வேலினால் தன்னையும் மாய்த்துக் கொண்ட அஞ்சிக் காஞ்சியும் பற்றித் தொல்காப்பியம் உணர்த்துகிறது. இதனை,

இன்னகை மனைவி பேஎய் புணணோன்

துண்ணுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும் (தொல்.77)

என்ற நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது.

இனிய பழம் தரும் இரவம் தழையையும் வேப்பந்தழையையும் வீட்டுமனையில் செருகுவோம். வளைந்த கொம்புப் பகுதி யாழிசையோடு பல்வகை இசைக்கருவிகளையும் முழக்குவோம். கையால் பையப் பையத் தடவி கொடுப்போம். மருந்து — மை இட்டு தடவிக் கட்டுவோம். ஐயவி என்னும் வெண்சிறு கடுகு எண்ணெய் புண்ணில் தூவுவோம். ஆம் புல்லாங்குழல் ஊதுவோம். மணி அடித்துக் கொண்டு காஞ்சிப் பண் பாடுவோம். வீடு முழுவதும் மணம் கமழும்படி புகைமூட்டுவோம். இப்படி அவனைக் காப்பாற்றுவோம் என்று வலியுறுத்துகிறது. இதனை,

தீங்கனி இரவமொடு வேம்புமனை செரீஇ

வாங்குமருப்பு யாழொடு பல்லியங் கறங்கக்

கைபயப் பெயர்த்து மையிழுது இழுகி

ஐயவி சிதறி ஆம்பல் ஊதி

இசைமணி எறிந்து காஞ்சி பாடி

நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்

காக்கம் வம்மோ காதலம் தோழி

வேந்துறு விழுமம் தாங்கிய

பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே (புறம்.38)

என்று புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

கலிங்க வீரர்கள் இறந்துபட்ட போர்க்களத்தில் படையின் அணிவகுப்புச் சிதறிற்று. தோற்ற யானைகளைக் கொண்டு பாகர்கள் மேலும் பகைவர்களைத் தாக்க எண்ணினர். அதானல் அவ்யானைகளைப் பகைவர் மீது ஏவினர். 'போர் புரிவதால் இனிப் பயனில்லை' எனக் கண்ட யானைகள், தம்மைச் செலுத்தும் பாகர்களையே தூக்கித் தரையிலே வீசி எறிந்தன. அந்த யானைகளைச் சோழ வீரர்கள் கட்டி வைத்தனர். யோகியரிடத்தில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகிய யானைகள் அடக்கப்பட்டு ஒடுங்கிக் கிடப்பதைப் போலக் கலிங்கரின் போர் யானைகள் சோழவீரர்களிடம் சிக்கிச் செயலிழந்து அடங்கிக் கிடந்தன.

ஒட்டு அறப்பட்ட போரில்

ஊர்பவர் தம்மை வீசிக்

கட்டு அறுத் தவர்போல் நின்று

கட்டுண்ட களிறு அநேகம்! (கலிங்கத்துப்பரணி, 458)

ஒட்டு — படையின் அணிவகுப்பு

அற — குலைய

ஊர்பவர் — பாகர்

இவ்வாறு கலிங்கத்துப்பரணி விளக்குவதை உணரமுடிகிறது.

முடிவுரை

கலிங்கத்துப்பரணி புறச்செய்திகள் மூலம் வீரர்களின் நாட்டுப்பற்றும், உயிரைப் பொருட்படுத்தாமல் முன்னின்று போரிட்டு வீரமரணம் எய்திய வீரச்சிறப்பும், பெண்களும் கணவன் வீரனாக இருக்க வேண்டும் என்று கருதுவதும், விழுப்புண் பட்டால் வெறுப்பு கொண்டு இறத்தலும், கணவனின் வீரத்தன்மையை புகழ்ந்து கூறுவதும் ஆகிய செயல்கள் மூலம் பெண்களும் ஆண்களைப் போல வீரப்பண்புடன் திகழ்வதை அறியமுடிகிறது.

புறவாழ்க்கையையே எல்லா நிலையிலும் உயர்த்திப் பேசுகின்றோம். புற வாழ்க்கை என்பது வீரநிலை உணர்வுகள் அகத்தில் இருந்தே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். எனவே மனிதராகப் பிறந்த எவரும் இயல்பாகப் போரை விரும்புவதில்லை. மனிதர்களின் மனதில் தற்காப்புக் கலைக்காக ஏற்பட்ட வீரநிலை உணர்வுகளின் வெளிப்பாடுகள் காலப்போக்கில்

மற்றவர்களை அடக்கும் எண்ணத்திற்கும் ஆளும் நிலைக்கும் கொண்டு சேர்ந்தன என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

ஆசிரியர் குழு, *சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 2020.

இராமசாமி, ஆ.வே. (திருக்குறள் முதறிஞர்). *திருக்குறள் எளிய தெளிவுரையும் பொன்மொழியும்.* ஸ்ரீ பராசக்தி எண்டர்பிரைசஸ், திருச்சி, ஏழாம் பதிப்பு, 2012.

கண்ணுசாமி பிள்ளை (உ.ஆ.). *நீதிநெறி விளக்கம்.* ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், இரண்டாம் பதிப்பு, 1949.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ் அகர முதலி.* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம், சென்னை, நான்காம் மறுபதிப்பு, 2022.

தமிழண்ணல். *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.* செல்லப்பா பதிப்பகம், மதுரை, ஆறாம் பதிப்பு, 2021.

துரைசாமிப் பிள்ளை, ஔவை (உ.ஆ.). *புறநானூறு மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2017.

நடராசன், பி.ரா. கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை.

மாணிக்கம், அ. (உ.ஆ.) *நன்னூல் காண்டிகையுரை.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2015.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *ஆசாரக்கோவை (தெளிவுரை).* உமா பதிப்பகம், சென்னை, பத்தாம் பதிப்பு,1996.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *ஏலாதி மூலமும் விளக்கவுரையும்.* உமா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2018.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *சிறுபஞ்சமூலம் மூலமும் விளக்கவுரையும்.* உமா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2018.

முருகன், வெ. *பால்ஸ் தமிழ் — தமிழ் — ஆங்கில அகராதி.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2015.

References

Asiriyar Kuzhu. Samana Munivargal Iyatriya Naaladiyar Moolamum Uraiyum. Saratha Pathippagam, Chennai, Fifth Edition, 2020.

Ramasamy, A.Ve. (Thirukkural Moothargnar). *Thirukkural Eliya Thelivuraiyum Ponmozhiyum*. Sri Parasakthi Enterprises, Trichy, Seventh Edition, 2012.

Kannusamy Pillai (Ed.). *Neethineri Vilakkam*. Gnanasambandar Pathippagam, Dharumapuram, Second Edition, 1949.

Shanmugam Pillai, M. (Ed.). *Tamil-Tamil Agara Mudali*. Tamilnadu Paadanool Matrum Kalviyiyal Kazhagam, Chennai, Fourth Edition, 2022.

Tamilannal. *Tholkappiyam Moolamum Karuthuraiyum*. Chellappa Pathippagam, Madurai, Sixth Edition, 2021.

Duraisamy Pillai, Avvai (Ed.). *Purananooru Moolamum Uraiyum*. Saratha Pathippagam, Chennai, Second Edition, 2017.

Natarasan, P.R. Kalingathubarani Moolamum Uraiyum. Saratha Pathippagam, Chennai.

Manickam, A. (Ed.) *Nannool Kandikaiyurai*. Poompuhar Pathippagam, Chennai, Sixth Edition, 2015.

Manickavasagan, G. (Ed.). *Acharakovai (Thelivurai)*. Uma Pathippagam, Chennai, Tenth Edition,1996.

Manickavasagan, G. (Ed.). *Yelathi Moolamum Vilakkavuraiyum*. Uma Pathippagam, Chennai, Second Edition, 2018.

Manickavasagan, G. (Ed.). *Sirupanjamoolam Moolamum Vilakkavuraiyum*. Uma Pathippagam, Chennai, Second Edition, 2018.

Murugam, Ve. *Pal's Tamil — Tamil — English Agarathi*. Palaniyappa Brothers, Chennai, Second Edition, 2015.

ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com